வருக... வருக...
உலகப் புகழ்பெற்ற
கைக்கடிகாரங்கள்
தாராளமாகக் கிடைக்கும்
ஒமெக்ஸ் (OMEX)
கெமி (CAMY)
சீக்கோ (SEIKO)
சிற்றிசன் (CITIZEN)
அலாம் சுவர்மணிக்கூடுகள்
சி. சின்னத்துரை அன் பிறதர்
யாழ்ப்பாணம் — போன் 284

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 வைகாசி 23 ஈழ ஆண்டு 29 இதழ் 113
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 6 6 78

மலிவு... மலிவு...
உங்கள் குழந்தைகளை
குதூகலப்படுத்த... இதோ
இறக்குமதி செய்யப்பட்ட
வண்ணவண்ண, வகைவகையான
விளையாட்டுப் பொருட்கள்...
அற்புத உலகுக்கு உங்கள் குழந்தைகளை
அழைத்துச்செல்ல... நாடுங்கள்
சி. சின்னத்துரை
அன் பிறதர்
யாழ்ப்பாணம் — போன் 284

# இலங்கைக்கு அதிவிரைவில்
# தொலைக்காட்சிச் சேவை!

## பேரவை

(கொழும்பு)

தேசிய அரசுப் பேரவை இன்று 2 மணிக்கு கூடுகிறது. இதற்கு முன்னர் அரசாங்க பாராளுமன்றக் குழுவின் கூட்டம் நடைபெறும்.

## பிரதான ஒளி நிலையம் பீதுறுதாலகால மலையில்

### ஜனாதிபதியை ஜப்பான் குழு சந்தித்தது

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன மீது கொண்டுள்ள பெருமதிப்பு காரணமாக, ஜப்பான் அன்பளிப்பாக வழங்கும் தொலைக்காட்சி சேவை நிலையத்தின் பிரதான ஒளிஅமைப்பு நிலையம், பீதுறுதாலகால மலையில் நிறுவப்படும.

பிரதான நிலையத்தை அமைக்கும் வேலைகள் விரைவில் ஆரம்பமாகும் என்றும், தொலைக்காட்சி சேவை அடுத்த ஆண்டில் இயங்கத் தொடங்குமென்றும் இங்கு வந்துள்ள ஜப்பானிய தொலைக்காட்சி குழுத்தலைவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தொலைக்காட்சி சேவையை ஆரம்பிக்குமுகமாக இங்கு வந்த ஜப்பானியகுழுவி னர் கடந்த ஒருமாதகாலமாக தங்கியிருந்து நாட்டின் பல பகுதிகளுக்கும் நேரில் விஜயம் செய்து மதிப்பீடுகளை நடத்தினர்.

### பிரதான நிலையம்

இக்குழுவினர் மேற்கொண்ட மதிப்பீடுகளைத் தொடர்ந்து, தொலைக்காட்சியின் பிரதான ஒளிபரப்புநிலையத்தை பீதுறுதாலகாலமலையில் அமைப்பதென்று முடிவு செய்துள்ளனர். இந்த நிலையத்தை நிறுவுவதற்குத் தேவைப்படும் சாதனங்கள் அனைத்தும் ஹெலிகொப்டர் மூலமாக இந்த மலைப்பிரதேசத்துக்குக் கொண்டு செல்லப்படும்.

### ஜனாதிபதியைச் சந்தித்தனர்

ஜப்பானிய தொலைக் காட்சிக்குழுவினர் நேற்று ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன

(6ம் பக்கம் பார்க்க)

## நான்கு கிரகங்கள்

(கொழும்பு)

அடுத்த சில தினங்களில் நான்குகிரகங்களை இலங்கை மக்கள் காணக்கூடியதாக இருக்குமென்று வானிலை அவதான நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேற்குத்திசையில், வியாழன், வெள்ளி, செவ்வாய், சனிக் கிரகங்களை நாம் காணக்கூடியதாக இருக்கும் என்றும் வெளிவட்டத்தைக் கொண்ட சனிக்கிரகத்தை தொலைநோக்கி மூலம் காணலாம் என்றும் வானிலை அவதான நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஓய்வுபெற்ற

## ஆங்கில ஆசிரியர் விரைவில் நியமனம்

(கொழும்பு)

ஓய்வு பெற்றுள்ள ஆங்கில ஆசிரியர்கள், விரைவில் ஆங்கில ஆசிரியர்களாக நியமிக்கப் படுவார்கள் என்று கல்வி அமைச்சர் திரு. நிஸங்க விஜயரத்தின தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சில் நேற்று நடைபெற்ற ஒருவைபவத்தில் பேசுகையிலேயே மேற்கண்ட தகவலை அமைச்சர் வெளியிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், மூன்றும் வகுப்பு முதல் ஆங்கிலத்தை ஒரு பாடமாகப் போதிக்க அடுத்த வருடம் முதல நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்களை ஆங்கில ஆசிரியர்களாக நியமிக்க, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி விட்டதென்றும், இவர்களுக்கு விரைவில் நியமனக் கடிதங்கள் வழங்கப்படுமென்றும் தெரிவித்தார்.

ஜி. சி. ஈ. (சாதாரணம்) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் ஒன்பது பாடங்களை எடுக்க அனுமதிக்கப்படு

(6ம் பக்கம் பார்க்க)

ஆகஸ்ட் முதல்

## பாண்டிச்சேரியில் மதுவிலக்கு அமுல்

சென்னை, ஜூன் 5

பாண்டிச்சேரி மாநிலத்தில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதல் மதுவிலக்கு கண்டிப்பாக அமுல் நடத்தப்படும் என்று பாண்டிச்சேரி முதலமைச்சர் திரு. எஸ். ராமசாமி இன்று இங்கு தெரிவித்தார்.

உத்தியோக அலுவல்கள் நிமித்தம் சென்னை வந்த முதலமைச்சர் திரு. ராமசாமி நிருபர்கள் மத்தியில் பேசுகையில், பாண்டிச்சேரியில் மதுவிலக்குச் சட்டத்தை அமுல்செய்வது பெரும் பிரச்சினையாக இருந்த போதிலும் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதல் இச்சட்டம் நிச்சயமாக அமுல்செய்யப்படும் என்றும். எவ்விதமாக இச்சட்டம் இயங்கும் என்ற விபரம் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அமைச்சரவை விஸ்தரிப்பு பற்றி அவர் குறிப்பிடுகையில் இரண்டு அமைச்சர்களைக் கொண்ட இப்போதைய அமைச்சரவை, 5 அல்லது 6 அமைச்சர்களைக்கொண்டதாக அமைக்கப்படும் என்று கூறினார்.

முப்பது அங்கத்தவர்களைக் கொண்ட பாண்டிச்சேரி சட்டசபையில் அ. இ. தி. மு. கழக உறுப்பினர்கள் 17 பேர் உள்ளனர்.

## ஜனதா ஆதரவாளர் 27 பேர் கைது

மதுரை, ஜூன். 5

திரு. குமரி அனந்தன் இன்று நடத்திய கூட்டத்தைக்குழப்ப முயன்ற ஜனதா ஆதரவாளர்கள் 27 பேர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

திரு. குமரி அனந்தன், ஜனதா கட்சியின் தமிழ்நாடு பொதுச் செயலாளர் பதவியிலிருந்து கடந்தமாதம் வெளியேற்றப் பட்டார். தமக்கு ஆதரவு தேடும் முயற்சியில் நேற்று மதுரையில் கூட்டமொன்றை நடத்தினார். கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் மண்டபத்திற்குள் நுழைந்து குழப்பம் விளைவிக்க முயன்ற 27 ஜனதாகட்சி ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

## சஞ்சய் பிணையில் விடுதலை; வெளிநாடு செல்லத்தடை!

புதுடில்லி, ஜூன் 5

திருமதி இந்திராகாந்தியின் புதல்வர் திரு. சஞ்சய் காந்தி, ஒருமாதகால சிறைத் தண்டனையின் பின்னர் இன்று பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

திரைப்படமொன்று எரிக்கப்பட்டது சம்பந்தமாக திரு. சஞ்சய்காந்தி மீது தொடரப்பட்ட வழக்கில், இவருக்கு முன்னர் பிணை வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இவர், இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட அரசதரப்பு சாட்சிகளைத் தன்வசப்படுத்த முயன்றதாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின்மீது திரு. சஞ்சய் காந்திக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்டிருந்த பிணை உயர்நீதிமன்றத்தால் ரத்துச்செய்ய பட்டு அவருக்கு ஒருமாதகால சிறைத் தண்டனை கடந்த மாதம் ஐந்தாம் திகதி வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவர் கைதுசெய்யப்பட்டு டில்லியிலுள்ள ஒரு சிறைச்சாலைக்கு கொண்டுவரப்பட்டார்.

ஐயாயிரம் ரூபா சொந்தப் பிணையிலும் ஐயாயிரம் ரூபா பாதுகாப்பு பிணையிலும் விடுதலை செய்யப்பட்ட திரு. சஞ்சய்காந்தி, திரைப்பட வழக்கு விசாரணை முடியும்வரை வெளிநாடு செல்லக் கூடாது என்று நீதிபதி இன்று தடைவிதித்துள்ளார். திரைப்பட எரிப்பு வழக்கு விசாரணை மீண்டும் இம்மாதம் 19ம் திகதி நடைபெறும் என்றும் நீதிபதி அறிவித்துள்ளார்.

## வரி விளம்பரம்

### தேவை

புங்குடுதீவு கிராமாட்சி மன்றத்தில் ஐந்து நடுக்கட்டல் உத்தியோகத்தர்கள் பதவியும், ஒரு சந்தை வரி வசூலிப்பவர் பதவியும் காலியாகவுள்ளன. விண்ணப்ப முடிவு திகதி 15-06-78. பூரண விபரங்களை இவ்வலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம். நிர்வாகஸ்தர், கிராமாட்சி மன்றம், புங்குடுதீவு. 9467

### பயிற்சி

3 மாத விசேட மின்னியல் டிப்ளோமாப்பயிற்சி 19-6-78ல் ஆரம்பமாகவுள்ளது. இந்த முறையில் செய்முறைப்பயிற்சி வளிக்கப்படும். பயிற்சியில் சேர்ந்து வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வதோடு நீங்கள் பல வழிகளில் நிச்சயமாக பயனடைவீர்கள் என்பதை நாம் உறுதிப்படுத்துகிறோம். அதிபர், இன்ஸ்ரிரியூட் ஒவ் எஞ்ஜினியரிங் ரெக்னொலொஜி, 11/B கொம்சாக் பில்டிங், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 9457


# 'தமிழீழத்தில் மக்களுக்கு சுதந்திரமும் இறைமையும் வேண்டும்'

## அ. எ. வி. சங்க வவுனியாக் கிளை அரசிடம் வலியுறுத்து

(வவனியா)

தமிழ் ஈழத்தைத் தமது தாயகமாகக் கொண்டு பல்லாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்ற தமிழினம் தமது சொந்த நாட்டில் தமது மொழி, மதம், கலை, கலாச்சாரம் ஆகியவற்றை இழந்து தங்களுக்குரித்தான வேலை வாய்ப்புகளிலும் இடமின்றி வாழ்கின்ற குறைகளை உடன் களைந்து சுதந்திரமும் இறைமையும் உள்ள மக்களாக வாழும் நிலையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்.''

இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்றினை அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் வவுனியாக் கிளை நிறைவேற்றியுள்ளது.

இக்கூட்டம் வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் தலைவர் திரு. சண்முகரத்தின ஐயர் சோமஸ்கந்தசர்மா தலைமையில் நடைபெற்றது.

மற்றும் சில தீர்மானங்கள் வருமாறு:-

இனக்கலவரத்தின் போது பாதிக்கப்பட்ட ஊழியர்கள் வடஇழக்குப்பகுதிகளுக்கு இடமாற்றம் கோரினால் அவர்களது கோரிக்கை உடன் வழங்கப்படவேண்டும்.

தமிழ்ப்பிரதேசங்களில் தமிழ் மக்களுடன் தமிழ் ஊழியர்கள் தமிழ் மொழியில் கடமையாற்றக் கூடிய விதத்தில் நிர்வாகத்தைப் பரவலாக்குவதுடன் வேண்டிய தமிழ் தட்டெழுத்துக்கருவிகளையும் மற்றும் சாதனங்களையும் உடன் வழங்க நடவடிக்கை எடுத்தல்.

சிங்கள மொழியில் தேர்ச்சி அடையவில்லையென்ற காரணம் காட்டி, வேலைநீக்கஞ் செய்த தமிழ் ஊழியர்கள் அனைவரையும், அவர்களது விருப்பத்திற்கிணங்க உடன் வேலைக்கு அழைத்தல்; பதவி உயர்வுக்குச் சிங்கள மொழி அவசியமற்ற சுற்றுநிருபம் உடன் வாபஸ்பெறப்படுவதுடன், ஊழியரின் முதுமுறையின்படி பதவி உயர்வு வழங்குதல்; வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சொந்த நிலமின்றி வாடகை வீடுகளில் குடியிருக்கின்ற ஊழியர்கள் அனைவரும் குடும்பத்திற்கு 5 ஏக்கர் முடிக்குரியகாணி விதம் வழங்கி, அவர்களுக்குக் குறைந்த செலவில் நீண்டகாலத் தவணையில் வட்டியில்லா நிவாரணம் வழங்குதல்.''

புதிய செயற்குழுவிலே பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ச. சோமஸ்கந்தசர்மா [வவனியாகச்சேரி] துணைத் தலைவர்: திரு. க இறஜோரி [நெடுஞ்சாலைத் திணைக்களம்] இணைச் செயலாளர்: டேவிட் நாகநாதன் [நெடுஞ்சாலைத்திணைக்களம்] துணைச் செயலாளர்: வி. நாகநாதன் [வவனியா கச்சேரி]. பொருளாளர்: ஐயம்பிள்ளை யாதவராசன் [நீர்ப்பாசனத் திணைக்களம்].

வெவ்வேறு திணைக்களங்களிலிருந்து 13 செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள். (உ)

# 80 வயது மூதாட்டி நஞ்சருந்தித் தற்கொலை

[யாழ்ப்பாணம்]

உடல்நலமின்மை காரணமாக தற்கொலை செய்யப் போவதாக அடிக்கடி கூறிய 80 வயது மூதாட்டி ஒருவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலைசெய்துகொண்ட சம்பவம் ஒன்று கோண்டாவில் வடக்கில் இடம்பெற்றுள்ளது.

20 ஆண்டுகளுக்கு முன் தமது கணவனை இழந்த ஐயன் வள்ளி என்பவரே தற்கொலை செய்துகொண்டவராவார்.

யாழ் பதில்நீதவானும் மரணவிசாரணை அதிகாரியுமான திரு. எஸ். அமிர்தலிங்கம் விசாரணை நடாத்தி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (நி)

ஏற்பு வலி:

# மன்னார்வாசியின் உயிர் யாழ்ப்பாணத்தில் பிரிந்தது

(யாழ்ப்பாணம்)

சந்தன் நல்லையா (வயது 38) என்ற மன்னார் வாசி, தொடையில் தடி குத்தியதால் ஏற்பட்ட ஏற்பினால் யாழ். பெரியாஸ்பத்திரியில் மரணமானார்.

இவர், சாவகச்சேரியில் திருமண வைபவம் ஒன்றுக்கு மன்னாரிலிருந்து வந்திருந்தாராம்.

தொடையில் தடிகுத்தியதால் ஏற்பட்ட வலியினால் இவர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் யாழ். பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டாராம்.

அங்கேயே மரணம் சம்பவித்தது.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். அமிர்தலிங்கம் வியத்து மரணமெனத் தீர்ப்பளித்தார். [உ]

## கட்டுவன் பாரதி ச.ச. நி.யில்

# கிராம அபிவிருத்தி சங்கம்

[யாழ்ப்பாணம்]

கிராமங்கள் தோறும் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகள் இனிமேல் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மூலமே செயல்படுத்தப்படும் என்ற அரசாங்கத்தின் திட்டப்படி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கி. அ. சங்கங்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இதன்படி கட்டுவன் தெற்கு- மேற்கு பாரதி ச. ச. நிலையத்தில் இம்மாதம் 20ம் தேதி கிராம அபிவிருத்திச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவிருக்கிறது.

வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. மகாதேவா தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்வைபவத்தில் எதிர்க்கட்சித் தலைவரும், காங்கேசன்துறை எம். பியுமான திரு. ஏ. அமிர்தலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். மற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. சிவரத்தினம், ஆசிரியர் சி சிவநாதபிள்ளை, ச. ச. நிலைய அமைப்பாளர் திரு. மு தருமமூர்த்தி, விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. என். கிருஷ்ணமூர்த்தி உட்பட பலர் உரையாற்றுவர். [ஏ]

# மாணவிக்குப் பரிசு

(இணுவில்)

விவேகானந்த சபை அகில இலங்கை ரீதியில் நடத்திய சைவசமய பாடப் பரீட்சையில் கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த நல்லையா ஹம்சானந்தி 5-ம் இடத்தைப் பெற்றமைக்குரிய பரிசுப்பத்திரங்களை அதிபர் திரு மகாதேவன் வழங்கினார். பரிசு பெற்ற மாணவியை அவர் பாராட்டினார்.

தோற்றிய 4000 மாணவர்களில் 10 பேருக்கு மட்டும் அகில இலங்கையில் பரிசில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. முதற்பரிசு பெற்றவருக்குத் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது. (உ)

இம்மாத இறுதியில்

# ''தெய்வம்தந்த வீடு'' திரைக்கு வருகிறது

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழ்ப்படத் துறையில் 21வது வெளியீடும் இலங்கையின் முதலாவது சினிமாஸ்கோப் திரைப்படமுமான வி. கே. ரி பொன்னுச்சாமியின் லிபேர்ட்டி பிலிம்ஸ் 'தெய்வம் தந்த வீடு' இம்மாத இறுதியில் திரைக்கு வருகிறது.

இப்படத்தின் கதை வசனங்களை ஏ. ரகுநாதன் எழுத கபூர் ஒளிப்பதிவு செய்ய நாகாவின் உதவியுடன் வில்பிரட் சில்வா நெறிப்படுத்தியுள்ளார்.

இப்படத்தில் தமிழ்நாடகத் தந்தை கலையரசு சொர்ணலிங்கம், கவாச்சி வில்லன் டீன்குமார், கவர்ச்சி நடிகன் அரிதாஸ் என்பவர் கௌரவ நடிகர்களாக நடிக்கிறார்கள்.

முக்கிய நட்சத்திரங்களான ஆர். குமுதினி ஏ. ரகுநாதன், என் என் தவரத்தினம், கே ஏ ஜவாகர், பிரான்ஸிஸ் பங்கலைமணி சுதுமலை தம்பிராசா, இலாங்கர், விஸ்வநாதராசா, சந்திரகலா ஜெயதேவி, சுப்புலட்சுமி காசிநாதன் என்பவர்களுடன் இசையமைப்பாளர், கண்ணன், கீதாலயம் காந்தன், நாவாந்துறை தேவராசா, நாவாய் றெமிசியஸ் நிஸ்தார், சோக்கல்லோ சண்முகம், ஜெயானந்தன், லங்கா, அன்னம்மா, சுந்தரம், செல்வ பிரகாசம் என்பவர்களும் நடித்துள்ளனர். வடமராட்சியில் புகழ்பெற்ற புனித ஸ்தலங்கள், படத்தில் இடம் பெற்றுள்ளன. நாதஸ்வர வேந்தன் அளவெட்டி என். கே. பத்மநாதனின் நாதஸ்வர இசையும் முழுவதும் ஒலிக்கிறது.

பாடல்களை பக்திப்பாடல்களை அரசு ஏ. ஆர். கிருஷ்ணமூர்த்தி, வீரமணிஐயர், கவிஞர் சாது, அம்பி ஆகியோர் எழுத கலாவதி, அமுதன் அண்ணாமலை, பார்வதி சிவபாதம் ஆகியோர் பாடியுள்ளனர்.

இசையமைப்பை எம். கே. ரொக்சாமியுடன், கண்ணன் நேசம் ஏற்றுள்ளனர். பூந்தான் யோசேப்பின் நாட்டுக்கூத்து, கலைமணி வடிவேலுவின் வில்லுப்பாட்டு என்பன சிறப்பம்சமாகும். படத்தொகுப்பு அபிமான்.

நடிகை ஆர். குமுதினி அண்மையில் காலஞ்சென்ற புகழ் பெற்ற நாடகக் கலைஞர் கே. கே. வி. செல்லையாவின் சிரேஷ்டபுதல்வியான நர்த்தகி ரேவதி என்பது குறிப்பிடத்தக்கது. [ஜ]

# 'நெஞ்சுக்குத் தெரியும்'

[யாழ்ப்பாணம்]

காரைநகர் கஜூரினா பீச்சில் 'நெஞ்சுக்குத் தெரியும்' சினிமாஸ்கோப் படப்பிடிப்பு நடைபெற்றுவருகிறது.

இப் படப்பிடிப்புக்காக அங்கு ஒரு செட் போடப்பட்டுள்ளது.

இப் படப்பிடிப்பில் நல்லூர் மனோகரன், சிவபாலன், ஹெலன்குமாரி, சந்திரகலா, இராசரத்தினம், அரசரத்தினம் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

டைரக்ஷன் கமரா பொறுப்புகளை லெனின் மொறாயஸ் ஏற்றுள்ளனர்.

இப் படப்பிடிப்பு இம்மாதம் 10ம் திகதிவரை தொடர்ந்து நடைபெறும். [க-ஆ]

# ஓய்வு பெறுகிறார்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு மீனவர் கூட்டுறவுச்சங்கத்தில் பொது முகாமையாளராக கடமையாற்றும் திரு பொ. சுப்பிரமணியம் இம்மாதத்துடன் தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். இவரின் இடத்திற்கு புதிய பொது முகாமையாளராக திரு செ. சண்முகசுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

# அடிக்கல் நாட்டினார்

[சுழிபுரம்]

கிராமசபை நூல்நிலைய புதிய கட்டிடத்திற்கான அடிக்கல்லினை சபையின் விசேட ஆணையாளர் திரு ஞானபாஸ்கரன் நாட்டிவைத்தார். [உ]

# விரிவுரை

(சுழிபுரம்)

வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமை முதல் தொடர்ந்து பத்துத் தினங்கள் அபிராமியந்தாதி விரிவுரை நடைபெறவுள்ளது.

தினமும் மாலைப் பூஜையைத் தொடர்ந்து விரிவுரை நடைபெறும். இதற்கான ஒழுங்கை வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபையினர் செய்துள்ளனர். (உ)

# கும்பாபிஷேக விழாவை யொட்டி

(வேலணை)

சரவணை பள்ளம்புலம் ஸ்ரீ முருகன் ஆலயத்தின் கூட்டுப் பிரார்த்தனைச் சபையினர் மகா கும்பாபிஷேக விழாவை யொட்டி பேச்சுப் போட்டி, திருமுறை ஓதற்போட்டிகளை கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு, மத்திய பிரிவு என மூன்று பிரிவுகளாக நடாத்தி வருகின்றனர்.

வெற்றி பெற்றவர்களுக்கு 9-ம் திகதி மகாகும்பாபிஷேக தினத்தன்று பரிசுகள் வழங்கப்படும். (உ)

# கோப்பாய்க் கலாசாலையில் யோகாசனப் பயிற்சி

## 17ம் திகதி அமைச்சர் ஆரம்பித்துவைப்பார்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர்களுக்கான யோகாசனப்பயிற்சி இம்மாதம் 17-ம் 18-ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது.

கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்ன பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைப்பார்.

நல்லை ஆதீனயோகாசன கலாநிதி திரு. ஸ்ரீ சிவானந்த யோகியின் மேற்பார்வையில் அவரின் ஆசிரிய மாணவர்களால் பயிற்சிகள் நடாத்தப்படும்.

பாடசாலைகளில் யோகாசனத்தை ஒருபாடமாக போதிப்பதற்கான திட்டத்தின் கீழ் இப்பயிற்சி இடம் பெறவிருக்கிறது. (உ)


உ

## திருமண அழைப்பு

பேரன்புடையீர்!

நிகழும் காலயுக்தி வருஷம் வைகாசி மாதம் 24-ந் திகதி (7-6-78) புதன்கிழமை காலை மணி 6-31க்கும் 7-10க்கும் இடையில் வரும் சுபமுகூர்த்தத்தில்,

எனது புதல்வன்

செல்வன் சபா. நாராயணன்

(ப. செ. உ. பண்டத்தரிப்பு, சுகநல சேவைப்பிரிவு

அவர்கட்கும்)

எமது புதல்வி

நிறைநாட் செல்வி பத்மாவதி

அவர்கட்கும்

வடலியடைப்பு புதரானை ஆலயத்தில் நடைபெறும் திருமணத்திற்கு தாங்கள் சுற்றமும் துணையும் சூழ வந்திருந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்

க தர்மலிங்கமும் பாரியாரும்
இந்துக் கல்லூரி வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

திருமதி பாக்கியம் சபாபதி
அரசடி வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

9492

ஈழநாடு
The Eelanaadu

# சீன-இந்திய உறவு

சீன-இந்திய உறவு சீரடைவதற்கான வாய்ப்பு அதிகரித்திருப்பதாக சமீபத்தில் சீனாவுக்குச் சென்றிருந்த ருமேனிய ஜனாதிபதி அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்.

சீனத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய ருமேனிய ஜனாதிபதி சீன-இந்திய உறவு அபிவிருத்தியடைவதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளதாகத் தாம் தமது பேச்சுவார்த்தைகளிலிருந்து அறிந்துள்ளதாகத் தெரிவித்திருக்கிறார்.

ருமேனியஜனாதிபதி தமது அபிப்பிராயத்தை இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாயிடமே தெரிவித்திருக்கிறார்.

இந்தியா விக்ஜனதாகட்சி ஆட்சிக்கு வந்ததிலிருந்தே இந்தியாவுடன் சீனா தனது உறவை வளர்த்துக்கொள்வதில் நாட்டம் காட்டியது.

சீனாவிலிருந்து உயர்மட்டக்குழுவொன்றும் இந்தியாவுக்குச் சென்று இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியது.

இந்தியாவுடனுள்ள பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பதற்குச் சீன அரசாங்கம் தயாராக இருப்பதாக சீனாவின் உபஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

சீனாவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் உறவு சீர்குலைந்துள்ளது மட்டுமன்றி இருநாடுகளுக்கிடையிலும் போர்மூளக் கூடிய ஆபத்தும் தோன்றியிருக்கிறது.

சீனாவுக்கும்சோவியத்யூனியனுக்குமிடையில் போர் ஏற்படுவது தவிர்க்கமுடியாதது என்று சீனத் தலைவர்களே கூறியிருக்கிறார்கள்.

ஆப்கானிஸ்தானில் சமீபத்தில் ஏற்பட்ட இராணுவப் புரட்சியை அடுத்து ஆப்கானிஸ்தானின் புதிய ஆட்சியை முதன்முதலாக உடனடியாகவே அங்கீகரித்த நாடு சோவியத்யூனியன்தான். ஆப்கானிஸ்தான் புரட்சிக்கு சோவியத்யூனியன்தான் பின்னணியில் நின்றதென்ற அபிப்பிராயம் சீனா உட்பட உலக நாடுகள் பலவற்றிலும் நிலவுகிறது.

திருமதி இந்திராகாந்தியின் தலைமையிலான அரசாங்கம் இந்தியாவில் ஆட்சியிலிருந்தபோது சோவியத் யூனியனுடன் நெருங்கிய உறவு வைத்திருந்தது. ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தபின் உறவு சீர்குலையவில்லையாயினும் முன்புபோல் அதிக நெருக்கம் இல்லை.

இந்தச் சந்தர்ப்பத்தை சீனா நன்கு பயன்படுத்திக்கொள்ள விரும்புவது இயற்கை.

சோவியத்யூனியனுடன் போர் மூளக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளதால் இந்தியாவுடனுள்ள பகைமையைக் குறைத்துக்கொள்ள சீனா விரும்புவதும் இயல்பே.

சீனாவுக்கும் இந்தியாவுக்குமிடையில் நல்லுறவு ஏற்படுவது இலங்கை உட்பட ஆசியநாடுகளில் அமைதிக்கும் வளர்ச்சிக்கும் பெரும் வாய்ப்பாகும்.

# அரசவேலை வங்கியில்வேலை பெறத் தகுதியானவர்யார்?

## — பற்றிமாகரன் —

யாழ்ப்பாணப் பகுதி எம். பி ஒருவரின் இல்லத்தில் அண்மையில் ஒருநாள் சில மணித்தியாலங்களைக் கழிக்க நேர்ந்தது. அச் சில மணிநேரத்தில் அங்கு பல நூற்றுக்கணக்கானோர் வேலைவாய்ப்பு வங்கி விண்ணப்பம் கேட்டு வந்து அவரை மிகுந்த தொந்தரவுக்குள்ளாக்குவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. தம்முடைய அன்பான வார்த்தைகளால் அவர்களை ஒருவாறு சமாளித்தார். இவ் வேலைவாய்ப்பு வங்கிபற்றிப் பலரும் சரியாக விளங்கிக்கொள்ளவில்லை என்பதை நான் உணரக்கூடியதாயிருந்தது. அவரிடம் வந்தவர்களில் நான்னூற்று ஒன்பது வீதமானோர் டாக்டர்கள், என்ஜினியர்கள், ஆசிரியர்கள் போன்றவர்களாகவும், வருமானவரி கட்டுபவர்களாகவும் இருந்தனர். எனவே வேலைவாய்ப்பு வங்கிபற்றிய பூரணவிபரத்திரட்டொன்றை இங்கே தர விரும்புகின்றேன்.

### நோக்கம்

இவ்வேலைவாய்ப்பு வங்கி வறுமையையும் பசிப்பிணியையும் போக்கும்முகமாகவே அரசால் திறுவப்பட்டுள்ளது. எனவே இத்திட்டத்தின் முன்னுரிமை வருமானம் குறைந்தவர்களுக்கே வழங்கப்படுகிறது. அதாவது வேலைக்கென ஆட்சிமன்றப் பிரதிநிதியால் பிரேரிக்கப்படும் நபரின் குடும்பத்தில் வருவாய் ஈட்டுபவர் ஒருவரும் இருக்கக்கூடாது. அவ்வாறு இருப்பின் அவ்வருவாய், பிரேரிக்கப்படும் நபரையும் குடும்பத்திலுள்ள ஏனையோரையும் வாழ்விப்பதற்குப் போதாமலிருக்கும் அளவிற்கு மிகக் குறைந்ததாயிருக்கவேண்டும். ஒருவருமே வேலைபார்க்காத குடும்பங்களிலுள்ள விண்ணப்பக்காரர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

இது சுற்றறிக்கை மூலம் அரசால் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. எனவே அரசசேவையில் இருப்பவர்களின் பிள்ளைகளுக்கும் மற்றும் வருமானம் பெறும் குடும்பங்களின் உறுப்பினர்களுக்கும் நிச்சயமாக இவ்வேலைவாய்ப்புத்திட்டத்தில் இடமில்லை.

### கல்விக்கு 2ம் இடம்

இத் திட்டத்தில் கல்விக்கு 2வது இடம் வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படைக் காரணம், வறுமை காரணமாகக் கல்வி தடைப்பட்டிருக்கும் என்பதுதான். எனவே அவர்களுக்கெனத் தயாரிக்கப்படும் இத் திட்டம் இவ்விசையிலிருந்து தவறக்கூடாது அல்லவா. எனவே பெரும்பாலும் தமக்கு அல்லது தமது பிள்ளைகளுக்குத் திறமையான பரீட்சை முடிவு உண்டு ஆகவே வேலை வேண்டுமென எண்ணுபவர்கள் இறுதியில் ஏமாற்றமடைவார்கள் என்பது உறுதி. வறுமையுடன் கூடிய திறமைக்கே இங்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது.

### வேலையில்லாதகாலம்

மேலும் இத்திட்டத்தில் ஒருவர் எவ்வளவுகாலம் வேலையின்றி இருக்கிறார் என்பது மிகவும் முக்கியம். ஏனெனில் நீண்டகாலமாக வேலையின்றி இருப்பவர்களின் பிரச்சினையைத் தீர்த்த பின்பே அரசு ஒருவர் மாதங்களாக வேலையின்றி இருப்பவர்களின் பிரச்சினைகளைக் கருத்தில் கொள்ளும், ஆனால் எம் மக்களில் பலர் சென்ற மார்கழி சித்திரைகளில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு எல்லாம் உடன் வேலை பெற்றுத் தரும்படி எம். பிக்களை வற்புறுத்துகின்றனர். இதில் எவ்வித பலனும் கிட்டாது என்பதை அவர்கள் உணர வேண்டும்.

### வேலையின்மை பிரதானம்

இத்திட்டம் முற்றிலும் வேலையற்று இருப்பவர்களுக்காகவே அமுலாக்கப்படுகிறது. பிரேரிக்கப்படும் நபர் 1-2-78 தொழில் அற்றவராக 78 தொழில் அற்றவராக இருத்தல் வேண்டுமென்பது நிபந்தனை.

ஆனால் எமது மக்களில் பலர் வேறு வேலைகளில் இருந்து கொண்டே உயர் பதவிகளை அடைவதற்காக இத்திட்டத்திலும் விண்ணப்பிக்க முற்படுகிறார்கள். சிலர் தனியார் துறைகளில் வேலையாக இருந்து கொண்டே அரசாங்கத்தில் நுழைவதற்கு இதனைப் பயன்படுத்த முயல்கிறார்கள்.

### வதிப்பிடம்

அதுமட்டுமல்ல பிரேரிக்கப்படும் நபர் 1-3-78ல் 18—40 வயதுக்கிடைப்பட்டவராகவும் பிரேரிக்கப்படும் தேர்தல் தொகுதியில் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருக்க வேண்டும். வேறு தொகுதியில் இருந்து கொண்டு இன்னோர் தொகுதிக்கு உரிமை பாராட்டமுடியாது.

### கிராமசேவகரின் சான்றிதழ்

ஆட்சி மன்றப் பிரதிநிதி பெயர்களைப் பிரேரித்தபின் அவ் விண்ணப்பம் கிராம சேவையாளரால் வதிப்பிடம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதுமட்டுமல்ல, விண்ணப்பதாரி பற்றிய அந்தரங்க அறிக்கையையும் அவர் தயாரித்துச் சமர்ப்பிக்க வேண்டும். எனவே எம். பியிடமிருந்து ஒருவாறு கடிதமொருவாய் உள்ளோர்விண்ணப்பப்படிவத்தை பெற்றாலும் பின்னர் கிராம சேவகரால் அது நிராகரிக்கப்பட்டு ஒரு இடம் வீணாகவும் போக இடமுண்டு.

### தொழில் அமர்த்துகைக்குழு

அரச உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய தொழில் அமர்த்துகைக் குழுவொன்று எம்.பி பெயர்களை பிரேரித்தபின்னர் விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்குட்படுத்தும், இச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பதாரியின் தொழில் பெறுவதற்கான தகுதிகள் மீளாய்வு செய்யப்படலாம்.

### வேண்டுகோள்

"வருமானம் குறைந்த குடும்பங்களில் உள்ளவர்களுக்கு வழிவிட்டு வருமானம் கூடிய குடும்பங்களில் உள்ளவர்கள் தாமாகவே ஒதுங்குவார்களாயின் எம். பிக்களுக்கு முன்புள்ள 90 வீத பிரச்னை உடனடியாகத் தீர்ந்துவிடும். எனவே ஒவ்வொருவரும் தமது மனச்சாட்சிப்படி தமது குடும்பநலன் ஒன்றை மட்டும் சிந்தியாது பொதுநலனிலும் அக்கறை கொண்டு செயற்படல் வேண்டும்" அந்த எம். பி. என்னிடம் சொன்னார். (அ)

# இன்று கொடியேற்றம்
# அன்னை நாகபூஷணி அருள் அனைவர்க்கும் கிட்டுக

## — கண. ஜீவகாருண்யம் —

"தனம் தரும் கல்விதரும்
ஒருநாளும் தளர்வறியா
மனம் தரும் பூங்குழலாள்
அபிராமி கடைக்கண்களே"

உலகத்தைப் படைத்து உயிர்களைக் காப்பவன் இறைவன். ஐந்தொழில் புரியும் இறைவனுக்குத்தன்னுடைய படைக்கப்பட்ட ஆன்மாக்கள் மீது கருணை செய்யச்சமயம் கிடைப்பதில்லை. உலகத்தில் ஆன்மாக்கள் படும் துயரங்களைச் சிவனுக்கு எடுத்துக் கூறுபவள் அன்னை பராசக்திதான். சக்தி இருந்தால்தான் எதையும் செய்யமுடியும். சக்தி இன்றேல் சிவமும் இல்லை. சக்தியின் பெருமையை நாம் உணரவேண்டும் என்பதற்காகத்தான் இறைவன் தாய் வடிவில் பெண்ணைப் படைத்திருக்கிறான்.

இப்படிப்பட்ட அருள்மிகுந்த அன்னை நயினைப் பதியில் நாகபூஷணி பெயர்பூண்டு தன்னை நாடிக் கடல்கடந்து வரும் அடியார்களுக்கு அருள் பாலிக்கின்றாள்.

முற்காலத்தில் வணிகன் ஒருவன் வியாபாரநோக்கமாகக் கடலில் நயினாதீவுக்கு அருகில் கப்பலில் வந்துகொண்டிருக்கும் போது கருடன் ஒன்று நாகபாம்பொன்றுடன் சண்டையிட்டுக் கொண்டு நின்றதாகவும், வணிகன் கருடனை சண்டையிட வேண்டாமென்று கேட்டுக் கொண்டதற்கு, கருடன் நயினாதீவில் அம்பாள் ஆலயத்தைக் கட்டும்படி கேட்டுக்கொண்டதாகவும் அதற்கு வணிகன் ஒப்புக்கொண்டு கோயில்கட்டியதாகவும் ஐதீகம் கூறுகிறது. இன்றும் பாம்பு சுற்றிய கல்லையும் கருடன் இருந்த கல்லையும் நயினாதீவுக் கரையில் காணலாம்.

மூலஸ்தானத்தில் நாக உருவில் அமைந்த லிங்கம் வரலாற்றுக்கு முற்பட்டது என்று சமய ஆராய்ச்சி அறிஞர்கள் கூறியுள்ளனர். இன்று கொடியேற்றத் திருவிழா நடைபெறும் இக்கோவிலில் எதிர்வரும் 19ந் திகதி தேர்த்திருவிழா நடைபெறும். இங்கு நடைபெறும் விழாக்களில் அன்னை பொற்தேரில் பவனிவரும் விழாக் காட்சி கண்கொள்ளாததாகும். 'அமுதசுரபி' என்ற அன்னதான மண்டபம் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும்.

அன்னையின் அருட்கடாட்சம் அனைவர்க்கும் கிட்டுக. (அ)

# வீதிகள் விஸ்தரிப்பு

(நெல்லியடி)

அல்வாய் தெற்கு கிராமத்தில் உள்ள ஒழுங்கைகள் பலவும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன. ஒழுங்கைக் கரையோரங்களில் உள்ள நிலவுடமையாளர்கள் தமது நிலங்களிலிருந்து 2 முழத்தை வீதி விஸ்தரிப்புக்கென கையளித்து தமது வேலிகளை அடைத்து வருகின்றார்கள்.

உடுப்பிட்டித் தொகுதி தேசிய அரசப் பேரவை உறுப்பினர் திரு. த. இராசலிங்கம் மேற்கொண்ட முயற்சியின் பயனாலேயே இப்பகுதியில் உள்ள வீதிகள் விஸ்தரிக்கப்பட்டுவருகிறது. (அ)

# திருவள்ளுவர் மகாசபை மகாநாடு

(யாழ்ப்பாணம்)

அ. இ. திருவள்ளுவர் மகாசபை 28வது ஆண்டு விழாவும் மகாநாடும் உடுவில் தெற்கு மல்வத்தில் இம்மாதம் 10ம் திகதி சனிக்கிழமை காலை நடைபெறவிருக்கிறது. காலைநிகழ்ச்சி மாநாடு அமரர் நல்லையா அரங்கில் மகாசபைத் தலைவர் திரு. க. கிருஷ்ணராசா தலைமையில் நடைபெறுகிறது. பொதுச்செயலாளர் திரு. ச. தில்லைநாதன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

நண்பகல் நிகழ்ச்சி அமரர் சிதில் அரங்கில் திரு. வி. தம்பிராசா தலைமையில் நடைபெறுகிறது தொடர்ந்து, பேச்சு, திருக்குறள் மனனம், நடிப்புப் போட்டிகளில் வெற்றிபெற்றோரின் நிகழ்ச்சிகள்.

அமரர் நல்லதம்பி அரங்கில் திரு. பி. ஏசேக்கியல் தலைமையில் பரிசளிப்பு வைபவமும் நடைபெறும். பிரதம விருந்தினராக வலி தெற்கு உதவிஅரசாங்க அதிபர் திரு. எஸ். குமாரசாமி கலந்து கொள்வார்.

மாலை யோகேஸ்வரன் அரங்கில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் மானிப்பாய் எம். பி. திரு. வி. தருமலிங்கம், உடுப்பிட்டி எம். பி. திரு. ரி இராசலிங்கம் கல்லூரிகள் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ரி. தாமோதரம்பிள்ளை, கம்யூனிஸ்ட் கட்சி வடபிரதேசசெயலாளர் திரு. ஏ. வைத்திலிங்கம் கல்லூரி ஐ. தே. க. அமைப்பாளர் திரு. சபா, இன்னத்தம்பி, எழுத்தாளர் கே. டானியல் உட்பட பலர் உரை நிகழ்த்துவர். இரவு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

# மணிவாக்கு

"நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி
அஞ்சி உயிர்வாழ்தல் அறியாமை"
— பாரதியார்

காங்கிரஸ் — இந்திரா காங்கிரஸ்

# கட்சிகளை ஒற்றுமைக்காக மட்டும் இணைப்பதில் அர்த்தமில்லை

## லோகசபையில் சவான் கருத்து

புதுடில்லி, ஜூன் 5

"இந்திய உத்தியோக பூர்வ காங்கிரசையும் இந்திரா காங்கிரசையும் கொள்கைக்காக அன்றி ஒற்றுமைக்காக மட்டும் இணைப்பதில் அர்த்தமில்லை; அந்த இணைப்பில் எமக்கு நம்பிக்கையுமில்லை."

இவ்வாறு இந்திய லோக சபையின் எதிர்க்கட்சித் தலைவர் திரு. வை. பி. சவான் லோகசபையில் தெரிவித்தார்.

இந்திய உத்தியோக பூர்வ காங்கிரஸ் தனது தனிப்பட்ட தன்மையைத் தொடர்ந்து பராமரிக்கும் என்றும் இனிமேல் இணைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் திரு சவான் கூறினார். (இ)

## 'அமிரின்' சிபார்சில் ஆசிரிய நியமனம்

(பண்டத்தரிப்பு)

காங்கேசன்துறைத் தொகுதியில் ஆசிரியர் பதவிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டிருந்த 8 பேருக்கு கல்வியமைச்சினால் இம்மாதம் 23ந் திகதி தொடக்கம் ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை எம். பி. யும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கத்தின் சிபார்சின் பிரகாரம் இவர்களுக்கு இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் பெரும்பாலானவர்களுக்கு இளிநொச்சித் தொகுதியில் உள்ள பாடசாலைகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். (உ)

## 60 கோடி கடத்தல் பொருட்கள்

புதுடில்லி, ஜூன் 5

இந்திய அரசினால் கடத்தல்காரர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட 60 கோடி ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்களை விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

தங்கம், கார்கள், டெலிவிஷன் பெட்டிகள், நகைகள், புடைவைகள் ஆகியன இக்கடத்தல் பொருட்களில் அடங்கும். (இ)

அரசியலிலிருந்து 10 ஆண்டுகள் ஒதுங்கினால்

## பூட்டோ வெளிநாட்டில் தங்க அனுமதிக்கப்படுவார்?

### பி. பி. செய்திக்கு அரசு மறுப்பு

இஸ்லாமாபாத், ஜூன் 5

முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் ஜுல்பிகார் அலி பூட்டோ 10 ஆண்டுகள் அரசியலிலிருந்து விலகியிருப்பதாக உறுதி அளிக்கும் பட்சத்தில் அவருக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனைகளிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டு வெளிநாட்டில் தங்கியிருக்க அனுமதிக்கப்படுவார் என இராணுவ அரசு தீர்மானித்துள்ளதாக பி. பி. ஸி. செய்தி ஒன்று தெரிவித்தது.

இச்செய்தியை பாகிஸ்தான் இராணுவ அரசு மறுத்துள்ளது.

பாகிஸ்தான் இராணுவ அரசு இச்செய்தியை மறுத்ததுடன், விஷமத்தனமான இச்செய்தியை வெளியிட்டது குறித்து பி. பி. ஸி. வானொலியை வன்மையாகக் கண்டித்துள்ளது. (இ)

"வெளிநாடுகளைப் போன்று

## கலைஞர்கள் இங்கும் மதிக்கப்பட வேண்டும்"

(உடுப்பிட்டி)

"பணம் வசூலித்துக் கலை நிகழ்ச்சிகளை நடாத்துவதன் மூலமே ஈழத்துக் கலையுலகத்தைக் கட்டியெழுப்பி கலைஞர்களை முன்னேற்ற முடியும்" என்று திரைப்பட நடிகர் "நவரச மன்னன்" விஜயேந்திரன் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அளிக்கப்பட்ட கலை நிகழ்ச்சியில் தலைமைவகித்துப் பேசிய கல்லூரி அதிபர் திரு. கே. குணரத்தினம் குறிப்பிட்டார்.

திரு. குணரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"ஈழத்துக் கலைஞர்களுக்குப் பொருளாதார ரீதியில் ஆதரவு அளிக்கவேண்டியது அவசியம். வெளிநாடுகளில் கலைஞர்களும் அரசாங்க ஊழியர்கள் போல் மதிக்கப்படுகின்றனர். இந்தவகையில் பாடசாலை மாணவர்களும் கலைஞர்களுக்கு உதவ முடியும்.

"பாடசாலைகளில் நடாத்தும் கலைநிகழ்ச்சிகளுக்குச் சிறிய தொகையிலான பணம் வசூலித்துக் கலைஞர்களை வாழவைக்கலாம். இதனால் ஒவ்வொரு மாணவனும் கலையுலகத்திற்கு மாபெரும் பணி செய்த பெருமையையும், திருப்தியையும் பெற முடியும். அவன் கொடுக்கும் பணத்தில் ஒரு பங்கு கலைஞனுக்கும், ஒரு பங்கு பாடசாலைக்கும் பயன்படும். பணம் செலுத்திக் கலை நிகழ்ச்சிகளைப் பார்க்கப் பழகிக்கொள்ள வேண்டும். பாடசாலை அதிபர்களும் மாணவர்களும் கலையுலகிற்குச் செய்யவேண்டிய பணி இதுவேயாகும்" என்று கூறினார்.

இவ்விழாவில் கலந்துகொண்ட 'நவரச மன்னன்' விஜயேந்திரன் பைலட் பிரேம்நாத், நெஞ்சுக்குத் தெரியும் ஆகிய திரைப்படங்களில் நடித்துக்கொண்டிருப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# இந்தியப் பிரதமர் அமெரிக்க விஜயம்

புதுடில்லி, ஜூன் 5

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி இன்று காலை அமெரிக்காவுக்குப் புறப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் மார்ச் மாதம் இந்தியப் பிரதமராகப் பதவி ஏற்ற பின்னர் திரு. தேசாய் அமெரிக்காவுக்கு விஜயம் செய்வது இதுவே முதல்தடவையாகும்.

அமெரிக்காவில் தங்கியிருக்கும்போது திரு. தேசாய் அமெரிக்க அதிபர் திரு ஜிம்மி கார்ட்டருடனும் மற்றும் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடாத்துவார்.

இந்திய-அமெரிக்க உறவு, மத்திய கிழக்கு விவகாரம், இந்து சமுத்திர அமைதிப் பிரதேச பிரகடனம் மற்றும் முக்கிய சர்வதேசப் பிரச்சினைகள் குறித்து திரு. தேசாய், அமெரிக்க அதிபருடன் பேச்சுவார்த்தை நடாத்துவார்.

திரு. தேசாய் 12 நாட்கள் வெளிநாட்டில் தங்கியிருப்பார். (இ)

எகிப்து—இஸ்ரேல்

# அமைதிப்பேச்சு

## மீண்டும் ஆரம்பம்?

ஜெருசலம், ஜூன் 5

மத்திய கிழக்கு அமைதி குறித்து எகிப்து-இஸ்ரேல் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி இஸ்ரேல் அமைச்சரவை ஆராய்ந்து வருகிறது என்று ஜெருசலத்திலிருந்து கிடைக்கப்பெற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

எகிப்து-இஸ்ரேல் அமைதிப் பேச்சுக்களைத் தொடர்ந்து நடாத்துவதற்கு இடையே தோன்றியுள்ள முட்டுக்கட்டைகளைத் தீர்ப்பதற்கான புதிய வழிவகைகள் பற்றி இன்று அல்லது நாளை தீர்மானிக்கப்படும் என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த அமைதிப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்த அமைச்சர் கூறினார். (இ)

## ஊழியர் சேமலாப நிதி

(உடுப்பிட்டி)

யாழ். மாநகரசபை ஊழியர்களாக இருந்த ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இருந்து இளைப்பாற்று நிதித் திட்டத்திற்கு மாற்றப்பட்ட ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதிப்பணம் இன்னும் திரும்பி வழங்கப்படாததால் ஊழியர்கள் கவலையும், அதிருப்தியும் அடைந்துள்ளனர்.

பிரஸ்தாப ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து முன்னர் ஊழியர் சேமலாப நிதிக்குப் பணம் அறவிடப்பட்டது. இளைப்பாற்று நிதித்திட்டம் கொண்டுவரப்பட்டு அதில் இவ்வூழியர்கள் சேர்க்கப்பட்டதினால் இதற்கு முன்னர் ஊழியர் சேமலாப நிதிக்கு அறவிடப்பட்ட பணம் மீளளிக்கப்படவேண்டும்.

ஆனால் ஒரு வருட காலத்திற்கு மேலாகியும் சேமலாப நிதிக்கு அறவிடப்பட்ட பணம் பிரஸ்தாப ஊழியர்களுக்கு வழங்கப்படாதுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## கூட்டணிக் கிளை விசேட கூட்டம்

(பண்டத்தரிப்பு)

அளவெட்டி தமிழர் விடுதலைக்கூட்டணியின் விசேட பொதுக்கூட்டம் கிளைத்தலைவர் பண்டிதர் க. நாகலிங்கம் தலைமையில் அளவெட்டி மகாஜனசபை மண்டபத்தில் இம்மாதம் 14-ந் திகதியன்று நடைபெறவுள்ளது.

அளவெட்டி கிராமத்தின் சமூக, பொருளாதார அபிவிருத்தி பற்றி ஆராயப்படவிருக்கும் இக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவரும் காங்கேசன்துறை எம். பியுமான திரு. அ. அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம், மானிப்பாய் தொகுதி எம். பி திரு. வி. தர்மலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வார்கள். (உ)

சந்தேகத்திற்கிடமான அறிக்கைகளை

# ஜனதா கட்சித் தலைவர்கள் வெளியிடக் கூடாது

## கிருபளானி ஆலோசனை

சென்னை, ஜூன் 5

ஜனதா கட்சித் தலைவர்கள் கட்சியின் ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்கக்கூடிய சந்தேகத்திற்கிடமான அறிக்கைகளை தமது மனம் போனபோக்கில் வெளியிடக்கூடாது.

ஆச்சாரிய கிருபளானி சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு ஜனதா கட்சித் தலைவர்களைக் கோரியுள்ளார்.

அண்மைக்காலமாக ஜனதா கட்சித் தலைவர்களினால் வெளியிடப்பட்ட அறிக்கைகள் ஒன்றுக்கொன்று முரணாகக் கட்சியின் ஒற்றுமையைக் குலைக்கக்கூடியனவாகத் தென்பட்டன என்றும் தெரிவித்த கிருபளானி நாட்டினதும் நாட்டு மக்களினதும் நன்மை கருதி இனிமேல் ஜனதா கட்சித் தலைவர்கள் சந்தேகத்திற்கிடமான அறிக்கைகளை வெளியிடுவதைத் தவிர்க்கவேண்டும் என்று அறிவித்துள்ளார். (இ)

## குள அபிவிருத்தி

(பண்டத்தரிப்பு)

அளவெட்டியிலுள்ள பிள்ளைக் குள அபிவிருத்தித் திட்டத்திற்கு எதிர்க்கட்சித் தலைவரும், காங்கேசன்துறை எம். பியுமான திரு. அ. அமிர்தலிங்கம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

இந்த நிதி மூலம் இக்குளம் ஆழமாக்கப்பட்டு விஸ்தரிக்கப்படவிருப்பதாக அளவெட்டி தெற்கு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. வ. இறைகுமாரன் தெரிவித்தார்.

## ஸ்தாபகர் நினைவுவிழா

(நெல்லியடி)

கரவெட்டி திருஇருதயக் கல்லூரியின் திருஇருதயநாதர் நினைவுநாள் கொண்டாட்டமும், பாடசாலைத் தினமும் கொண்டாடப்பட்டது.

பாடசாலை அதிபர் திரு. தோமஸ் சப்பல் தலைமையில் மாணவ மாணவிகள் கலந்துகொண்ட இவ்விழாவில் கலை நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள் என்பன இடம் பெற்றன.

## "அரச நிறுவனங்களில் பாரபட்ச நியமனங்கள்"

### த. கா. வாலிபமுன்னணி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவான அரசாங்கத் திணைக்களங்களிலும், சபைகளிலும், கூட்டுத்தாபனங்களிலும் பாரபட்சமான முறையில் எம்.பி.க்களின் சிபார்சின் பேரில் நியமனம் செய்யப்படுவதைக் கண்டிக்கிறோம் என்று தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றினை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணியின் செயற்குழு நிறைவேற்றியுள்ளது.

இக்கூட்டம் உப-தலைவர் திரு. க. கிருஷ்ணகுமார் தலைமையில் வண்ணார்பண்ணையில் நடைபெற்றது.

மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. (உ)

## புதிய இயக்குநர் சபை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மீனவர் கூட்டுறவுச்சங்கத்திற்கு புதிய இயக்குநர் சபை உறுப்பினர்கள் கடற்றொழில் அமைச்சர் திரு. வெஸ்டல் பெரேராவினால் நியமிக்கப்பட்டுள்ளனர். தலைவராக திரு. மா. மகாதேவன் நியமிக்கப்பட்டுள்ளார். ஏனைய நியமனங்கள் வருமாறு உபதலைவர்: வ. ந. தேவகடாட்சம். செயலாளர் நா பொன்னம்பலம். இயக்குநர் சபை உறுப்பினர்களாக பின்வருவோர் நியமிக்கப்பட்டுள்ளனர் மா. கந்தசாமி, அ. அருளானந்தம், ச. சிரனிலான், வே. குமாரசாமி.

